www.Padasalai.Net www.TrbTnpsc.com

Tsi10T

தென்காசி மாவட்டம்
இரண்டாம் திருப்புதல் தேர்வு - 2024

07-02-2024

வகுப்பு 10
தமிழ்

கால அளவு: 3.00 மணிநேரம் மதிப்பெண்கள்: 100

குறிப்பு: i) இவ்வினாத்தாள் ஐந்து பகுதிகளைக் கொண்டது.
ii) விடைகள் தெளிவாகவும் குறித்த அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

பகுதி – I (மதிப்பெண்கள் : 15)

உரிய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் எழுதுக. 15x1=15

1. 'வாயு வழக்கம் செறிந்தடங்கில் ஆயுள் பெருக்கம் உண்டாம்' என்றவர்?
அ) பரணர் ஆ) ஔவையார் இ) கபிலர் ஈ) நக்கீரனார்

2. 'மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம்வைத்தும்' என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக் குறிப்பு உணர்த்தும் செய்தி
அ)சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது ஆ) காப்பியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
இ)பக்தி இலக்கியத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
ஈ) சங்கம் மருவிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

3. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் எவ்வாறு வரும் -
அ) எந்+தமிழ்+நா ஆ) எந்த+தமிழ்+நா இ) எம்+தமிழ்+நா ஈ) எந்தம்+தமிழ்+நா

4. 'உனதருளே பார்ப்பன் அடியேனே' – யாரிடம் யார் கூறியது?
அ)குலசேகராழ்வாரிடம் இறைவன் ஆ)இறைவனிடம் குலசேகராழ்வார்
இ)மருத்துவரிடம் நோயாளி ஈ)நோயாளியிடம் மருத்துவர்

5. இடைக்காடனாரின் பாடலை இகழ்ந்தவர்— இடைக்காடனாரிடம் அன்பு வைத்தவர் —
அ) அமைச்சர்,மன்னன் ஆ) அமைச்சர்,இறைவன் இ) இறைவன்,மன்னன் ஈ) மன்னன், இறைவன்

6. 'தன் நாட்டு மக்களுக்குத் தந்தையும் தாயும் மகனுமாக இருந்த அரசன்' என்னும் மெய்க்கீர்த்தித் தொடர் உணர்த்தும் பொருள் -
அ) மேம்பட்ட நிருவாகத்திறன் பெற்றவர் ஆ) மிகுந்த செல்வம் உடையவர்
இ) பண்பட்ட மனிதநேயம் கொண்டவர் ஈ) நெறியோடு நின்று காவல் காப்பவர்

7. 'மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்' - மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும் முறையே
அ) திருப்பதியும் திருத்தணியும் ஆ) திருத்தணியும் திருப்பதியும்
இ) திருப்பதியும் திருச்செந்தூரும் ஈ) திருப்பரங்குன்றமும் பழனியும்

8. 'வீட்டைத் துடைத்துச் சாயம் அடித்தல்' இவ்வடி குறிப்பிடுவது ----
அ)காலம் மாறுவதை ஆ) வீட்டைத் துடைப்பதை
இ)இடையறாது அறப்பணி செய்தலை ஈ) வண்ணம் பூசுவதை

9. இருநாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம் —
அ) நாட்டைக் கைப்பற்றல் ஆ) ஆநிரை கவர்தல்
இ) வலிமையை நிலைநாட்டல் ஈ) கோட்டையை முற்றுகையிடல்

10. 'இவள் தலையில் எழுதியதோ கற்காலம்தான் எப்போதும்' - இவ்வடிகளில் கற்காலம் என்பது -
அ) தலைவிதி ஆ) பழையகாலம் இ) ஏழ்மை ஈ) தலையில் கல் சுமப்பது

11. கலையின் கணவனாகவும் சமுதாயத்தின் புதல்வனாகவும் இருந்து எழுதுகிறேன் - இக்கூற்றிலிருந்து நாம் புரிந்துகொள்வது
அ) தம் வாழ்க்கையில் பெற்ற விளைவுகளைக் கலையாக்கினார்
ஆ) சமூகப் பார்வையோடு கலைப்பணி புரியவே எழுதினார்
இ) அறத்தைக் கூறுவதற்காக எழுதினார்
ஈ) அழகியலுடன் இலக்கியம் படைத்தார்

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.

“செம்பொ னடிச்சிறு கிங்கிணியோடு சிலம்பு கலந்தாடத்
திருவரை யரைஞா ணரைமணி யொடு மொளி திகழரை வடமாடப்
பைம்பொ னசும்பிய தொந்தி யொடுஞ்சிறு பண்டி சரிந்தாடப்
பட்ட நுதற்பொலி பொட்டொடு வட்டச் கட்டி பதிந்தாடக்
கம்பி விதம்பொதி குண்டல முங்குழை காது மசைந்தாட”

12. பாடலின் இலக்கிய வகை
அ) பத்துப்பாட்டு ஆ) சிற்றிலக்கியம் இ) எட்டுத்தொகை ஈ) பதினெண்கீழ்க்கணக்கு

13. 'கிங்கிணி' என்னும் அணிகலன்
அ) இடையில் அணிவது ஆ) தலையில் அணிவது
இ) காலில் அணிவது ஈ) நெற்றியில் அணிவது

14. குண்டலமும் குழைக்காதும் - இலக்கணக் குறிப்பு தருக
அ) எண்ணும்மை ஆ) உம்மைத் தொகை
இ) உவமைத் தொகை ஈ) வினைத்தொகை

15. சீர் எதுகைச் சொற்களைக் குறிப்பிடுக.
அ) பட்ட, பொட்டொடு ஆ) செம்பொன், பைம்பொன்
இ) கலந்தாட, சரிந்தாட ஈ) வடமாட, பதிந்தாட

## பகுதி – II (மதிப்பெண்கள் : 18)

### பிரிவு - 1

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. 4x2=8
21 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.

16. விடைக்கேற்ற வினாக்கள் அமைக்க
அ) 'கா' என்பதற்குப் பாரந்தாங்கும் கோல் என்று பொருள்.
ஆ) இளம் வயதிலேயே சமூக விடுதலைக்காகப் போராடியவர் மார்ஷல் ஏ.நேசமணி ஆவார்.
17. தற்கால உரைநடையில் சிலேடை அமையும் நயத்திற்கு எடுத்துக்காட்டு தருக.
18. அவையம் - குறிப்பு வரைக.
19. செய்கு தம்பிப் பாவலரின் கல்வி பற்றிய கருத்துகள் கொண்டு முழக்கத்தொடர்களை உருவாக்குக.
20. பாசவர், வாசவர், பல்நிண விலைஞர், உமணர் - சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?
21. 'விடல்' என முடியும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு - 2

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க 5x2=10

22. கால வழுவமைதியைச் சான்றுடன் விளக்குக.
23. வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்றித் தொடர்களை இணைத்து எழுதுக
அ. நேற்று என்னைச் சந்தித்தார். அவர் என் நண்பர்.
ஆ. பொது அறிவு நூல்களைத் தேடிப்படித்தார். அவர் போட்டித் தேர்வில் வென்றார்.
24. இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
அ) விடு – வீடு ஆ) இயற்கை – செயற்கை
25. கலைச்சொற்கள் தருக. அ) Terminology ஆ) Cultural Boundaries
26. மதில் போர் பற்றிய திணைகளை விளக்குக.
27. தொகைச்சொற்களை விரித்து எழுதுக அ) முப்பால் ஆ) நாலிலம்
28. 'பதிந்து' - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## பகுதி – III (மதிப்பெண்கள் : 18)

### பிரிவு - 1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க 2x3=6

29. 'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது' - இதுபோல் இளம்பயிர்வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.

30. தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம் - இடம் சுட்டி விளக்குக?

31. உரைப் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

தற்போது வெளிவருகிற சில உயர்வகைத் திறன்பேசியின் ஒளிப்படக் கருவி, செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தைக் கொண்டிருக்கிறது. கடவுச் சொல்லும் கைரேகையும் கொண்டு திறன்பேசியைத் திறப்பது பழமையானது. உரிமையாளரின் முகத்தை அடையாளம் கண்டு திறப்பது, இன்றைய தொழில்நுட்பம். செயற்கை நுண்ணறிவு, படம் எடுக்கும் காட்சியை அடையாளம் கண்டு அதற்கேற்பத் தன்னைத் தகவமைத்துக் கொள்கிறது.

அ) உயர்வகைத் திறன்பேசிகளில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பம் எது?

ஆ) திறன்பேசியைத் திறக்கும் பழைய முறைகள் எவை?

இ) திறன்பேசியில் படம் எடுக்கும் காட்சியை அடையாளம் கண்டு செயற்கை நுண்ணறிவு எவ்வாறு செயல்படுகிறது?

### பிரிவு - 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க 2x3=6

34 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.

32. வைத்தியநாதபுரி முருகன் குழந்தையாக அணிந்திருக்கும் அணிகலன்களுடன் செங்கீரை ஆடிய நயத்தை விளக்குக.

33. எவையெல்லாம் அறியேன் என்று கருணையன் கூறுகின்றார்?

34. அடிபிறழாமல் எழுதுக.

"வெய்யோனொளி" எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடல்

(அல்லது)

"நவமணி" எனத் தொடங்கும் தேம்பாவணிப் பாடல்.

### பிரிவு - 3

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க 2x3=6

35. வினா வகைகள் குறித்துச் சான்றுகளுடன் எழுதுக.

36. தன்மை அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

37. அலகிட்டு வாய்பாடு தருக.

பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்.

## பகுதி – IV (மதிப்பெண்கள் : 25)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க 5x5=25

38. அ) சந்தக் கவிதையில் சிறக்கும் கம்பன் என்ற தலைப்பில் இலக்கிய உரை எழுதுக.

(அல்லது)

ஆ) சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும், அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.

39. அ) உங்கள் தெருவில் மின்விளக்குகள் பழுதடைந்து உள்ளன. அதனால் இரவில் சாலையில் நடந்து செல்வோருக்கு ஏற்படும் இடையூறுகளை எழுதி ஆவன செய்யுமாறு மின்வாரிய அலுவலருக்குக் கூட்டு விண்ணப்பம் எழுதுக.

(அல்லது)

ஆ) பள்ளித்திடலில் கிடைத்த பணப்பையை உரியவரிடம் ஒப்படைத்துப் பாராட்டு பெற்றதைப் பற்றி உறவினருக்குக் கடிதம் எழுதுக.

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



41. வீட்டு எண்.54, தென்பொதிகைநகர், தென்காசி மாவட்டத்தில் வசித்து வரும் இளவரசனின் மகள் சுடர்க்கொடிக்காக, கொடுக்கப்பட்டுள்ள மேல்நிலை சேர்க்கை விண்ணப்பப் படிவத்தை நிரப்புக.

42. அ) பள்ளியிலும் வீட்டிலும் உன் செயல்களை அட்டவணைப்படுத்துக.

| பள்ளியில் நான் | வீட்டில் நான் |
|---|---|
| நேரத்தைச் சரியாகக் கடைப்பிடிப்பேன் | வீட்டு வேலைகளைச் செய்வேன் |
| | |
| | |
| | |
| | |

(அல்லது)

சிவக்குமார். மு, பூசிராமம் ஸ்டேட் பேங்க் ...
(ஆ) மொழிபெயர்க்க. வல்லம்-627809, தென்காசி மாவட்டம்

1. Education is what remains after one has forgotten what one has learned in School. – Albert Einstein
2. Tomorrow is often the busiest day of the week. – Spanish Proverb
3. It is during our darkest moments that we must focus to see the light. – Aristotle
4. Success is not final, failure is not fatal. It is the courage to continue that counts. – Winston Churchill.

பகுதி – V (மதிப்பெண்கள் : 24)

அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்க 3x8=24

43. அ) ஒரு குழந்தையைத் தூக்கவும் கீழே விழுந்த ஒரு தேனீர்க் கோப்பையை எடுக்கவும் மென்பொருள் அக்கறை கொள்ளுமா? வெறும் வணிகத்துடன் நின்றுவிடுமா? இக்கருத்துகளை ஒட்டிச் 'செயற்கை நுண்ணறிவின் எதிர்கால வெளிப்பாடுகள்' பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

(அல்லது)

ஆ) சங்க இலக்கியம் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.

44. அ) "அறிவியலாளர் ஸ்டீபன் ஹாக்கிங்குடன் ஒரு விண்வெளிப் பயணம்" என்னும் தலைப்பில் கற்பனைக் கதை ஒன்றினை எழுதுக.

(அல்லது)

ஆ) அழகிரிசாமியின் 'ஒருவன் இருக்கிறான்' சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதை மாந்தர் குறித்து எழுதுக.

45. அ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று தருக.

முன்னுரை – தமிழக எல்லை – தமிழன்னை – இலக்கியங்கள் - இலக்கண நூல்கள் - சான்றோர் வளர்த்த தமிழ் - முடிவுரை

(அல்லது)

ஆ) முன்னுரை - விசும்பின் துளி - விண்ணின் மழைத்துளி - வான் சிறப்பு - வள்ளுவன் வாய்மொழி - மரம் வளர்ப்போம் - பசும்புல் நுனி - இயற்கையைப் போற்றுவோம் - முடிவுரை.

*****

Padasalai.Net

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com